Registered at the G-P-O as a News-Paper No. 59/300.

# வெற்றிமணி

Registered No. 10, 315

மலர் 2 | 1-9-56 விலை சதம் 25 | இதழ் 9.

தமிழ்பேசும் இனத்தின் உரிமைப்போராட்டத்தை நிர்ணயிக்கும்
தமிழரசுக் கட்சியின் சரித்திரப்பிரசித்திபெற்ற மகாநாடு
திருக்கோணமலையில் 18, 19-8-56 இல் நடைபெற்றது.

## தமிழ்பேசும் இனத்தின் உரிமைப்போராட்டத்திற்குச் செல்லும்

# திருமலையாத்திரை

ஆக்கியோன்:-
பண்டிதர் - சோ இளமுருகனார்
நவாலியூர்

## தொண்டரை வருமாறு அழைத்தல்

திருமலைக்குச் செல்லுவோம்
சிறுமை அடிமை வெல்லுவோம்

1 எங்க ளன்னை எங்க ளன்னை
எழில் மிகுந்த செந்தமிழ்
பொங்கும் ஈழ நாட்டில் வாழப்
புதிய கோயில் கட்டவே [திருமலை]

2 மன்னும் பழமை பெருமை கொண்டு
வையம் ஆண்ட செல்வியை
இன்னல் நீக்கி அரசு கட்டில்
ஏற்றி வைக்கத் தொண்டர்நாம் [திருமலை]

3 தேனும் பாலும் அமுதும் போலச்
செவியில் நாவில் இனிப்பவள்
மானங் காத்து வாகை சூட்ட
வருக தொண்டர் வருகவே [திருமலை]

4 அன்பு வாய்மை யின்சொ லாதி
அணிபு னைந்து வருகவே
துன்பி லின்பங் கொள்வ மென்று
சூளு ரைத்து வருகவே [திருமலை]

5 சேனை யில்லைப் படைக ளில்லைச்
செற்ற மில்லை எம்மிடம்
மான முண்டு வீர முண்டு
வாய்மை யுண்டு வருகவே [திருமலை

6 கத்தி யில்லை ஈட்டி யில்லைக்
கையிற் படைக ளில்லையே
சக்தி யத்தி லாணை யிட்டுத்
தமிழைக் காக்க வருகவே [திருமலை

7 நெஞ்சி லன்பு வாயி லின்சொல்
மெய்ய டக்கம் நேர்ந்தபின்
அஞ்சிநிற்ப தடிமை யடிமை
ஆர்த்தெ ழுந்து வருகவே [திருமலை]

## உரிமைப்போராட்டம் இதுவெனல்

8 மன்ன ராட்சி யில்லை யென்று
மக்க ளாட்சி கண்டபின்
என்ன அடிமை எவரும் மன்னர்
எங்கள் உரிமை பேணவே [திருமலை]

9 அடிமை யில்லை அடிமை யில்லை
ஆண்டா னடிமை யில்லையே
மடிமை கொண்டு வாழ்வ மாயின்
மானங் கப்ப லேறுமே [திருமலை]

10 எங்கள் சாதி வாழ்ந்த பூமி
ஏருங் குளமும் கூறுமே
எங்கள் மன்ன ராண்ட பூமி
இதில் நடக்க வுரிமையே திருமலை]

11 இதில் நடக்க வுரிமை யுரிமை
இதிலி ருக்க உரிமையே
இதிலி லிருந்து குரலெ ழுப்பி
இனிய கீதம் பாடுவோம் [திருமலை]

12 எங்கள் பூமி எங்கள் ஆட்சி
எவர்க்கு முரிமை யில்லையே
பொங்கு கழனி யடவி தோறும்
போயி ருந்து வாழ்வமே [திருமலை]

13 உரிமை யென்று சான்று கூற
ஒருவ ரிங்கு வேண்டுமோ?
பரிய மரமும் சிறிய புல்லும்
பண்பி னோடு கூறுமே [திருமலை]

14 எங்கள் நாட்டிற் றமிழைப் பேசும்
எவரு மெம்மி லோர்குலம்
சங்க மாய்த் திரண்டு கூடத்
தடைகள் யாண்டும் இல்லையே (தொடரும்,)




அன்பார்ந்த மருமக்களுக்கு,

சென்ற இதழில் மருமகள் எவருமே எழுதுவதில்லை என்று இந்திய மருமகன் கூறியிருப்பதையறிந்ததும் பலர் எழுத ஆரம்பித்து விட்டனர் இந்த இதழில் மருமகள்மாரின் விஷயங்களையும் படித்துப்பாருங்கள். தமிழ்த்தம்பியை மறக்கமுடியாது. அவர் 28-7-56ல் எழுதியகடிதத்தில் எழுதியவை. இமயத்தனை இன்னல்கள் வரினும் வா! வா! வண்ணக்கிளியே வா! என்று கூவிக்கொண்டே நம் "மணி"க்காகத் தொண்டாற்றுவேன். என்பதுமட்டும் உறுதி. ஈழஅன்பர்கள் பலர்மடல் எழுதுகின்றனர், பதில் எழுதித் தாளவில்லை. என் அறையையே ஒரு கடித மலையாக்கிவிட்டார்கள்! என எழுதியுள்ளார். இவரைப்போன்ற ஆதரவு வெற்றிமணிக்கு இருக்கவேண்டும் என்பதே எமது அவா! ஆத்திசூடி எத்தனைபேர் மனப்பாடஞ் செய்கிறீர்கள்.

"மணிமாமா"

21. நன்றிமறவேல்;—
ஒருவர் உனக்குச்செய்த உபகாரத்தை நீ ஒருபோதும் மறவாதே,

22. பருவத்தேபயிர் செய்
பயிர்களை அதுவிளையும் பக்குவகாலத்திலே வேண்டும் முயற்சியிலே வழுவாமல் இடு.
பயிருக்குவேண்டும் முயற்சிகளாவன உழுதல், எரு இடுதல், களைபிடுங்குதல் நீர்பாய்ச்சல். காத்தல் என்கிற ஐந்தும் ஆம்.

23 மண்பறித்துண்ணேல்
நிலம் வழக்குத் தீர்ப்புக்குவரும் குடிகளுடைய பொருளைக் கவர்ந்து நீ ஜீவனம். பண்ணுதே.

24 இயல்பலா தனசெயேல்.
தரும நூலுக்குப் பொருத்தமல்லாதவைகளை நீ செய்யாதே.

25 அரவமாட்டேல்.
நஞ்சையுடைய பாம்புகளை நீ பிடித்து ஆட்டாதே

---

## 'எங்கள் ஊர் வவுனியா'

பொன்னும் மணியும் பொலிந்து திகழும் இலங்கைத் தீவின்வட பால், கலைமகள் களித்து நடம்புரியும் யாழ்நகரின் அருகாமையிலே, நெடுங் குன்றங்களும், நீள்மரங்களும், நெளிந்தோடும் ஆறுகளும், குளங்களும் நிறைந்து, பசியும் பிணியுமற்று, வசியும் வளனுமாக வாழ்வளிக்கும் வவுனியாவே எங்கள் ஊராகும். அதுஇப்போது வன்னி என்றும் பெயர் பெறும்.

வன்னிநகர் "அடங்காப்பற்று" எனும்மங்காப்பெயர் கொண்டது. இப் பெயர்பெறுதற்குக்காரணம் அவர்கள்பேராசையன்று. முற்காலத்தில்பல் வகைச் செல்வங்களும் நிறைந்து விளங்கிய வன்னியிலே உள்ளமக்கள் ஈதலையே தலைசிறந்த அறமாகக்கொண்டிருந்தனர். இரப்போர்க்குஇல்லை யென்னாது ஈந்தனர், ஈகையின்மேல்அவர்கள் கொண்டிருந்த அடங்காப் பற்றினாலேயே அவர்களதுநாடாகிய வன்னிக்கு "அடங்காப்பற்று" எனப்பெயர் உண்டாகியதென்று பலரும் கூறுவர்.

வவுனியாநகர், நீர்வளம், நிலவளம் நிறைந்துவிளங்கும். நன்நாடு பொன்னும் மணியும் பொலிந்து திகழும் வளநாடு. இங்குள்ளோரில் அநேகர் கமத்தொழில் செய்பவர்கள். வயல்விதைப்பதற்கு வேண்டிய நீரைப் பெறுவதற்கு மழையைஎதிர்பார்க்க வேண்டியதில்லை. அவர்களுக் குத்தேவையானநீர் எப்போதும் குளங்களில் நிறைந்திருக்கும். அங்கே மீன்கள் துள்ளிவிளையாடும். மழையற்றகாலங்களில் குளங்களில் குளங் களில் நீர் சிறிது வற்றியிருந்தாலும் வருடத்தின் முக்காற்பங்கு நாட்க ளிலும் குளங்கள் நிறைந்திருக்கும்.

இங்குள்ள வயல்கள் எப்போதும் பசுமையாக இருக்கும். இக்காட்சி கண்ணுக்குக்குளிர்ச்சியையும், உள்ளத்திற்கு மகிழ்ச்சியையும் கொடுக்கும் அறுவடை தொடங்கும் காலங்களிலே பயிர்கள் பொன்னிறமாக இருக் கும். காற்றிலே அப்பயிர்கள் அசையும்போது நெற்கதிர்கள் ஒன்றோ டொன்று மோத "கல கல" என்னும் ஓசைபிறக்கும்.

இங்குள்ளகாடுகளில் புள்ளிமான்கள் துள்ளிவிளையாடும். மரங் களில் குரங்கினங்கள் குதித்துவிளையாடும். யானைகள், கரடிகள், கூட் டம் கூட்டமாகநீர் நிலைகளைநாடி நீர்குடிக்கும். அழகியபூங்கொடிகள் பக்கத்திலுள்ள மரங்களைக் கொழுகொம்புகளாகக் கொண்டு சுற்றிப் படர்ந்திருக்கும். இங்குள்ளகாடுகளிற் பல இக்காலத்தில் திருத்தப்பட்டு நன்செய்நிலங்களாகவும், குடியேற்ற இடங்களாகவும் காணப்படுகின்றன

இத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்ததும் பல்வகைச்செல்வங்களும் பொலிந்து திகழ்வதுமாகிய வவுனியாவிலே பிறந்ததற்காக வன்னியராகிய நாம் உண்மையிலேயே பெருமையடைகிறோம்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானிலும் நனிசிறந்தனவே".

(செல்வி சே. சிவநேசமணி அ. இ. 71 வவுனியா)

...O...

## 'கலிகாலக் கலியாணம்'

—O—

ஆர். ஆர். என். ஜார்ஜ் சின்னுளபட்டி

கலிகாலக் கலியாணம் காட்டில்ஒரே கொண்டாட்டம்.
புலிமகனுர் வந்துவிட்டார் புள்ளிசட்டை போட்டுக்கொண்டு
எலிப்பெண்ணும் இளம்சூழ ஏறிமணே அமர்ந்துவிட்டார்
ஒலிமுழங்க மந்திரத்தை ஒட்டையரும் முழக்கலுற்ருர்

...2...

நாட்டுக்கவி கழுதையின் நாதசுர நாதவெள்ளம்
நீட்டிஓலக் குழலிசைத்த நாயவரின் கீதநாதம்
பாட்டுக்கொரு புலவனுன பாணக்காக்கை குரலழகும்
ஆட்டமெரு தவுலடித்த தவளேயரின் தவுலடியும்
காட்டில் கானமழை பொழியக் கலிகாலக்காதலர்கள்
நாட்டவரும் அதிசயிக்க சதிபதிக ளாயினரே!

...3...

கலப்புமணம் காட்டவரே கண்டிப்பாக செய்தல்வேண்டும்
நிலப்பரப்பில் உயர்வுதாழ்வு நீக்கஅது வழியேஆகும்
நலமுடனே வாழநாடு நீசஜாதிப் பித்தொழித்து
பலமிக்க புலிமகனுர் எலிமகளே மணந்தார்இன்று
நலம்வளர" எனமொழிந்தார் நரியென்ற மந்திரியார்.

...4...

ஒன்றுபட்டு வாழ்வோமென்று ஒருகுரலாய் அவர்முழங்க
கொன்றுதின்ப தில்லேயென்று கொடும்புலியார் சபதம்செய்ய
"என்றுமின்பம்" என்றுகூறி யானேயாரும் முன்னேசெல்ல
நன்றுகூறி நின்செவியன் நாதசுரம் ஊதலுற்ருன்

⊛...⊛...⊛

எதனே உயர்ந்தோன் செய்கிருனே அதையே மற்றமனிதர் பின்பற்றுகிருர்கள். அவன்எதைப் பிரமாணமாக்குகிருனே அதையே உலகத்தார் தொடருகிருர்கள்.

# 'சங்கீதம்,

கம்பர் குறிப்பிட்ட கலைகள் அறுபத்துநான்கினுள் சங்கீதமும் ஒன்று. சங்கீதம் நமக்குஓர் உயிர்க்கலையாகும். நமது உணர்ச்சி நரம்புகளைத்தூக்கி உற்சாகப்படுத்தும் சக்தி சங்கீதத்திற்குண்டு. சங்கீதத்தின் பிறப்பிடம் ஒலி. கொல்லன் பட்டடையிற் சம்மட்டியால் அடிக்கும் போது எழும்ஓசை நம்மை இன்புறுத்துவதில்லை. ஏனெனில் அங்கே உண்டாகும் ஒலி அலைகள்லய, சுருதி அமைவுடன் கிளப்பப்படுவனவல்ல பாடும்குயிலின் ஓசையிலே இன்பத்தைக் காண்கின்றோம். பறவைகளின் இன்குரலிலே பிறந்தசங்கீதம் பாமரர்முதற் பண்டிதர்வரை எவரும் உணர்ந்து அனுபவிக்கத்த தந்தபடி வளர்ச்சியடைந்திருக்கிறது. முன்னொருமுறை அகத்தியரும், இராவணனும் இசைப்போர் நிகழ்த்தினரென்றும் அகத்தியர் பாடும்போது கற்பாறை கரைந்துருகிற்றென்றும் கர்ணபரம்பரைக்கதையொன்று வழங்குகின்றது. இறைவனே சங்கீதத்தில் அதிக நாட்டமுள்ளவனென்றும் கம்பரர்அசுவதர் என்றகானத்தில் வல்ல இரு கந்தர்வரைத்தன் காதுகளிற்குழைகளாக அணிந்திருக்கின்றாரென்றும் புராணங்கள் கூறும் இன்னும் கொடிபோறனை இராவணன் இசைபாடி இறைவனருள் பெற்றானென்னும் வரலாறும் இறைவனது இசையிலீடுபடுந்தன்மையை உறுதிப்படுத்துகின்றது. இவையெல்லாம் எதற்காக எடுத்துக்காட்டுகின்றோம். சங்கீதக்கலைக்கு அவ்வளவு சிறப்புண்டென்பதற்குத்தான் சுவைமிக்க பொருட்களிற்றெவிட்டும் குணமும் சேர்ந்திருக்கும். சர்க்கரை சுவைமிக்கபாண்டம் ஆனால் அளவுக்குமீறி அருந்திவிட்டால் தெவிட்டிவிடுகிறது. அவ்விதமின்றி பருகப்பருகப் பின்பும் பருகும்படிதூண்டும் சக்திவாய்ந்தது சங்கீதம். உதயணன் என்னும் யாழ் வாணனின் இன்னிசையைக்கேட்ட ஒருயானை மதமடங்கிப்பணிசெய்த பான்மையை பழந்தமிழ் நூலாகிய பெருங்கதை பாராட்டிக்கூறுகின்றதல்லவா? அப்படி ஏன்பாராட்டிக் கூறுகின்றது. சங்கீதம் மக்களைமட்டுமின்றி மாக்களையும் மயக்கிவிடுகின்றது என்பதற்காகத்தான்.

மேலும் பாம்பாட்டிகள் அந்தப்பாம்பு இருக்கும் புற்றினிடத்துச் சென்று மகுடியை வாசிக்கின்றார்கள். அப்பொழுது பாம்பானது வெளிப்பட்டுத்தனது அழகியபடத்தை விரித்து தன்னைமறந்து அந்தமகுடியிலேயே மறந்து விடுகின்றதல்லவா? இவ்வாறு மயங்கச்செய்வது எது சங்கிதம்தானே?

கர்நாடக சங்கீதத்தின் தந்தைஎன்னும் தனிப்பெரும் சிறப்புக்குரியவர் திருவையாறு ஸ்ரீ தியாகையரவர்களாகும்.

சங்கீதக்கலைக்குப் புத்துயிர்கொடுத்துப் புதுப்பொலிவூட்டிப் புதியமெட்டுகளில் சிறிய கீர்த்தனங்களை உருவாக்கிய இவ்வுத்தமர் பெயர் சங்கீத உலகுள்ளளவும் நிலைத்திருக்குமென்பதிற் ஐயமில்லை. சியாமா சாஸ்திரிகள் கனம் கிருஷ்ணையர் ஆகியோரும், சங்கீதக்கலைக்குப் புதுமெருகும் புத்தெழிலும் புனைந்துள்ளார்கள். தமிழிற் கீர்த்தனைகள் பாடிச் சங்கீதக்கலைக்குத் தொண்டுபுரிந்தவர்களுள் கோபாலகிருஷ்ணபாரதியார் குறிப்பிடத் தகுந்தவர், இவரது நந்தன் சரித்திரக்கீர்த்தனைகள் சங்கீத உலகில் சாகாவரம் பெற்றுவிட்டன. தமிழகத்திலுள்ள சங்கீத வித்துவான்கள் சிலர் சங்கங்கள் மூலமாகச் சங்கீதக்கலைக்குப் புத்துயிர்கொடுத்துவருகின்றனர். பிரபல வீணைவித்துவான் காரைக்குடி சாம்பசிவ ஐயர், சுதந்திரக் குடியரசின் ஜனாதிபதியாற் கௌரவிக்கப்பட்டுள்ளார். எனவே சிலஆண்டுகளில் தமிழ்நாட்டில் கவின்கலைகள் சிறப்புற்றோங்கும் சங்கீதம் தன் பண்டைச் சிறப்புடன் மிளிரும் என எதிர்பார்க்கலாம்.

செல்வி. க. சத்தியபாமா—அரசினர் கனிஷ்டபாடசாலை. வவுனியா.

---

## ஆரோக்கியமும்-வைத்தியசாலையும்,

| | |
|---|---|
| வைத்தியசாலைகள்— | 270 |
| படுக்கைகள் | 23135 |
| வைத்தியர்கள் | 814 |
| அப்போதிக்கரிமார்கள் | 926 |
| தாதிமார்கள் | 2105 |
| பாராபரிப்பாளர் | 5724 |
| பிறப்பு வீதம்[1000க்கு] | 36.2 |
| இறப்பு வீதம் [1000க்கு] | 10.4 |
| சிசுமரணம் ” | 72.0 |
| பிரசவதாய்மார் மரணம் | 4.6 |

மேலே காட்டப்பட்ட விபரங்கள் 1954 ஆம் ஆண்டுக்குரியவை.

## சுவாத்தியம்

உஷ்ணம்-மழைவீழ்ச்சி

| | பாகை | அங்கு |
|---|---|---|
| கொழும்பு | 80.0F | 103.4 |
| யாழ்ப்பாணம் | 81.7 | 58.1 |
| திரிகோணமலை | 8.22 | 66.5 |
| அம்பாந்தோட்டை | 80.9 | 52.2 |
| இரத்தினபுரி | 81.0 | 149.8 |
| அநுராதபுரம் | 80.9 | 64.5 |
| கண்டி | 75.6 | 86.3 |
| தியத்தலாவை | 68.8 | 66.7 |
| நுவரெலியா | 60.3 | 82.6 |

மேலே காட்டப்பட்ட விபரங்கள் 1954ஆம் ஆண்டுக்குரியவை வருடச் சராசரி உஷ்ணமும் வருடமழைவீழ்ச்சி மொத்தமும் கொடுக்கப்பட்டுள்ளன.

---

## ஊரின் பெயர்என்ன?

முதலாம் இரண்டாம் எழுத்துக்கள் சேரின் அழகு என்ற பொருளையும் முதலாம் இரண்டாம் மூன்றும் எழுத்துக்கள்சேரின் தாய்என்றபொருளையும், முதலாம் நாலாம் ஐந்தாம் எழுத்துக்கள் சேரின் இரக்கச் சொல்லையும், முதலாம் ஆறும் ஏழாம் எழுத்துக்கள்புத்தகமேலுறை என்றபொருளையும் முதலாம் ஏழாம் எழுத்துக்கள் தடு என்ற பொருளையும் ஐந்தாம் ஏழாம் எழுத்துக்கள் பாஷை என்ற பொருளையும் ஐந்தாம் ஏழாம் எழுத்துக்கள் கனிதரும் ஒரு மரத்தையும் குறிக்கும் ஏழு எழுத்துக்கலாகிய இந்த ஊரின் பெயரென்ன?

# சரோஜா

[கா. தமிழ்த்தம்பி]

கட்டிலில் அமர்ந்து எம்ப்ராய்டரியை கட்டியழுதுகொண்டிருந்தாள் சரோஜா. ஏழையாகப்பிறந்தால் எலும்பொடியப் பாடுபடவேண்டும். செல்வர் குலத்திலேயுதித்துவிட்டால் அந்தக் கவலையே ஏது? பாழும் பணம் சிலரை சோம்பேறியாகவும் பலரைபாட்டாளியாகவுமல்லவா மாற்றுகிறது! நல்ல உலகமிது!

"சரோ!"

"யாரது, வனஜாவா? வாடியம்மா வா! ஊர்லேயிருந்து எப்போவந்தே?

"ராத்திரித்தான்—அதுசரி; ஏது ஒரே மும்முரமாய் பின்னல் வேலையிலே ஈடு பட்டுட்டே?"

"சும்மா பொழுதுபோறதுக்குத்தானே. அதுசரி உனக்கு ரிஸல்ட் எப்போ? "அடுத்த மாதம் ம்! —சரோ!

நீதாண்டி கொடுத்துவைத்தவள். நாங்க ராவும்—பகலும் படிச்சு என்னகண்டோம்?

ஏன் இப்பத்தான் பெண்ணுரிமை பேசறாங்களே!"

"பெண்ணுரிமையாவது, மண்ணுரிமையாவது? ... ஆமா. சுவற்றிலே மாட்டியிருக்கிற அந்தப்படம் யாருடையது சரோ?

"அதைப்பற்றி மட்டும் கேட்காதே வனஜா" என்றுசொல்லி முடிக்குமுன்பே அப்பேதையின் விழிகளிரண்டும்வெந்நீரை வடிக்கத்தொடங்கின! ஏன்?

இதோ—

மலர்புரி உயர்நிலைப்பள்ளியில் முதலாம்படிவம் படித்துக்கொண்டிருந்தாள் சரோஜா. குறும்புதவழும் அவளது விழிகளைப் பார்த்த மாத்திரத்திலேயே எவரும் இதமாக நடப்பர். தவிரவும் அவள் அவ்வூர் நாட்டாண்மைக்காரரது செல்வமகளும்கூட. புத்தம்புதிய ஆடைகளுக்கும் ஆபரணங்களுக்கும் கேட்கவும் வேண்டுமோ? படிப்பில் ஏதோ சுமார்தான் இருந்தாலும் பெரிய இடத்துப்பெண்களுக்கே உரித்தான "கர்வம்" என்ற பேய் பீடிக்கப்படவாயிருந்தாள், ஆனால் அந்த வகுப்பிலேதான் "ராஜாமணியும் படித்துவந்தாள். சரோஜாவிற்கு முற்றிலும் மாறுபட்டவள் ராஜாமணி. இவளது அப்பாவோ—விவரிப்பானேன். சுருக்கமாகக் கூற வேண்டுமானால் ஏழை! விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்றபடி கல்வி கேள்விகளில் மிகவும் சிறந்து ஆசிரியர்களின் மதிப்பைப்பெற்றிருந்தாள். இது ஒருவகையில் சரோஜாவிற்கு வெறுப்பையே தந்தது"

"தீயுள்ள இடத்தில் புகை கிளம்புவது சகஜம்தானே.

அன்று டி-இ-ஓ வருகிறாரென்றதுமே பள்ளியே ஒரே கலகலப்பாயிருந்தது ஆயிற்று-அவரும் வந்தார்-ஒவ்வொருவரையும் ஏதோ கேள்விகள் கேட்டார்—சரோஜாவின் முறைவந்தது. ஆந்தைபோல் விழித்தாள் பாவம்! அடுத்தாற்போல் ராஜாமணியைக் கேட்டதும் டக்-கெனப்பதில் சொன்

றுள். அவரும் ஒரு சபாஷ்" போட்டார். வருஷா வருஷம் பணம் பாஸா கி வந்தாள் சரோஜா. பெரிய இடங்களுக்கு உரித்தானது தானே இது! நல்லபடிப்பு! நாசமாப் போன படிப்பு!

காலச்சக்கரம் சுளன்றது வேகமாக!

காலாண்டு விடுமுறையில் உல்லாசப் பிரயாணம் சென்றிருந்தனர் எங்குதெரியுமா? குற்றாலத்திற்கேதான்! எப்படியே ராஜாமணிக்கும் லக்கி அடித்தது. அவளும் சென்றிருந்தாள். ஏற்கனவே வெறுப்புற்றிருந்த சரோஜாவிற்கு இது மேலும் அதிகவெறுப்பைத்தந்தது. எல்லோரும் அருவியில் குளித்து விளையாடினர். ஆஹா!—ஐந்தருவியின் அமுத ஓசையும்! தேனருவியின் தேனோசையும் எதற்குத்தான் ஒப்பிடுவது?

தன் சிநேகிதிகளான கோமளா, லீலா; முதலியவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தாள் ராஜாமணி.

அப்போது:–

ஒரு கற்பாறையின்மீது ஏறிநின்று இயற்கையின்வளப்பத்தைரசித்துக்கொண்டிருந்த சரோஜா திடீரென்று மயங்கிக் கீழே சாய்ந்தாள்!

நல்லவேளை—ஓடோடிச்சென்று அவளைத் தாங்கிப்பிடித்துக் காப்பாற்றினுள் ராஜாமணி, அனுல் என்னவிந்தை? – மறுவினுடி? ராஜாமணிக்குக் கிடைத்த பரிசு கன்னத்தில் ஒரு அறையே! ஆமாம்! ஏழையென்ற காரணத்தால்! ஆனுல் ராஜாமணி மட்டும்மா கலங்கவோ கர்ஜிக்கவோ செய்யவில்லை,

அதுமுதல் சரோஜாவின் உள்ளம் அரிக்கத்தொடங்கியது! ஆணவ முழக்கம் எதிரொலித்த இருண்ட இதயத்திலே; அன்பின் முரசொலி ஒளி பரப்பத் தொடங்கியது. வெட்கப்பட்டாள்; வே த னை ய டை ந் தா ள் சரோஜா!

அதுமட்டுமா? மன்னிப்புக்கேட்டதோடன்றி ராஜாமணியை உற்ற தோழியாக்கிக்கொண்டாளென்றுல் அன்பின் பெருமையை யான் விளக்கவும் வேண்டுமோ? இருவரும் வீணையும் நாதமும் போல விளங்கினர்,

திடீரென்று காலமென்றகயவன் அவர்களது அன்புப்பாலத்தை அடியோடு நொறுக்க ஆயத்தம்செய்தான், அல்ல செய்துமுடித்தான்.

ஆம், சரோஜா திடீரென்று பள்ளியிலிருந்து நின்றுவிட்டாள். யாது காரணமென்று அறியாது தவித்தாள் ராஜாமணி. ஒருவருடம் ஓடிமறைந்தது பின்புதான் புரிந்தது சரோஜா பட்டணத்துக்குப் போய்விட்டாள் என்பது. ஹூம்......அன்புள்ள அகத்தில் அமைதியேது?

ஐந்தாண்டுகள் ஓடிமறைந்தன. ராஜாமணியின் இதயத்தை அணு அணுவாகமாய்த்துக்கொண்டு! அவளும் பள்ளியிறுதிவகுப்பை ஒருவாறு முடித்தாள் பிரித்தகாலம் ஒன்று சேர்க்கும் என்ற பெருந்தன்மையினுல் பேசாமல் அடங்கிக்கிடந்தாள் பேதை.

அவ்வூரில் பத்துவருஷத்திற்கொருமுறை பவானியம்மன் தேரோட்டம் நடைபெறுவதுண்டு. அதற்கு தன் தாயாருடன் சென்றிருந்தாள் ராஜாமணி, மக்கள் வெள்ளம் வழிந்துகொண்டிருந்தது.

கொளுத்தும் கோடையின் கொடுமையைத் தவிர்க்க இருவரும் இளநீர்க்கடையை நோக்கிச்சென்றனர். ஏதோ பட்டுப்புடவையின் சரசரப்பும், வளையலொலியுடன் சிரிப்பொலியும் கலந்தொலிக்கவே ஏறிட்டுப் பார்த்த ராஜாமணியின் கண்கள் அகலவிரிந்தன. உள்ளம் அலையோசையெழுப்பியது! ஆம்! அவளது அன்புகவர்ந்த சரோஜாதான் தன் பெற்றோருடன் நின்றுகொண்டிருந்தாள்.

ஆஹா! ...என்ன அலங்காரமாயிருக்கிருள்?

"சரோ!......"

தன்னையுமறியாமல் கூவிவிட்டாள்ராஜாமணி, உடனே திரும்பிப்பார்த்த சரோஜா "ராஜாமணி!" என்றுகூவி அவளை அணைத்துக்கொள்ளவில்லை. பாசத்தினுல்பதறவில்லை, அந்த பணக்காரப்பாவை! பின்என்னசெய்தாள்?

யாரையோ அந்நியரைப் பார்ப்பதுபோல் ஏறிட்டுப் பார்த்துவிட்டு ஏதும் தெரியாதவள் போலேகிவிட்டாள்.

அவ்வளவுதான்:—

பாசமென்ன கடைச்சரக்கா படிக்கணக்கிலே வாங்கிக் கொள்ள, இல்லையே! ராஜாமணியின் இதயத்திலே எண்ணுயிரம் கோடி ஈட்டிகள் இமை மூடுமுன்பாய்ந்ததைப்போன்றிருந்தது. டணர்!—என்று அவளது தலையிலே பேரிடி"—விழுந்தபிரமை! அப்போதுமுதல் ஜுரமென்று படுக்கையில் படுத்தவள்தான் அன்புச்சிலை ஆலகால விஷப்பாம்பாக மாறியது கண்டு அழுதாள். புலம்பினுள்! மருத்துவர்களின் மருந்தெல்லாம் ஏறவில்லை. மனவியாதிக்குக் கூடவா மருந்தளிக்கும் மதி. இம் மாநிலத்திலேயிருக்கிறது. எவளைத் தம் இதயபீடத்திலே வைத்து சதா மகிழ்ந்தாளோ அவளால் —அல்ல—வெறிபிடித்த இனத்தின் ஆணவத்தால் அந்தோ இறந்து பட்டாள் ராஜாமணி! வெறிபிடித்த உலகமே! பார்! பாசவெறிகொண்டபாவைக்கு நீ பரிசளித்திருக்கும் பவிசை! அன்புக்குக் கிடைப்பது அகால மரணமா? ஐயோ!...

ஆணவமே! வாழ்ந்துவிடுவாயா அதிகநாள்?

அப்போது தபால்காரன் அவள் பாஸானதற்கு அறிகுறியான ஒரு தபால்கார்டை வீட்டினுள்ளேவீசிவிட்டுச்சென்ருன்,

அவள்தான் திரும்பாத-திமிர்வாதமற்ற உலகிற்கு பாஸாகிவிட்டாளே! "ராஜாமணி" யின் மறைவு கேட்டவுடனேயே சரோஜாவின் மமதைக் கோட்டை மண்மேடாகப்போயிற்று. சதாசஞ்சலமே வடிவானுள். அது முதல் சதா ஆஸ்பத்திரியாகத்தான் இருநதது அவள்வீடு.

அமைதி அரசோச்சியது—

இதைக்கேட்டதும் எனக்கே அழுகை வருகிறதுசரோ- என்னஇரு ந்தாலும் ஆணவம் அழிவுக்கருவிதானடி- பார்த்தியா ஒரு உயிர் அநியாய மாய்ப் போச்சே! என்று சூள்கொட்டினுள் வனஜா.

“என் ராஜாமணியைக் கொன்றது எமனல்ல! நானேதான்! ஐயோ !—” வென்று சுவற்றில் மாட்டியிருந்த படத்தையெடுத்துக் கையில் வைத்துக் கொண்டு அழுதாள்.

ஹூம்!—மாண்டவர் மீளமலையத்தனை மாணிக்கம் குவித்திட்டாலும் மார்க்கந்தானேது?

குழந்தையின் அழுகையொலி கேட்கவே விசுக்— “கென எழுந்து செல்ல முயன்முள் சரோஜா!

துக்கம் தொண்டையை பலமாக அழுத்த இருமினுள்! மீண்டும் இருமி னுள்! ஐயோ!—ரத்தவாந்தியெடுத்தாள்!

உடனே டாக்டர்! டாக்டர்! என்று கூவியவாறே வெளியே ஓடி னுள் வனஜா!

ஆனுல் —

“கொலைகாரி! கொலைகாரி!!” என்றகோடிக்கணக்கான குரல்கள் அவளது குடலைத்துளைத்தன!

அடுத்த நிமிஷம்—

வெட்டியதென்னைபோல் “மடா”-ரென்று சாய்ந்தாள் கீழே! மறு விநாடி—அவளது உயிர் நீங்கிவிட்டது! ஐயகோ!

பாசத்திற்குக் கிடைக்கும்பரிசு இவைதானு?

அதோ! சரோஜாவின் சமாதி அழகிய தாஜ்மஹாலைப்போலக் காட்சிய ளிக்கின்றதே! ராஜாமணியின் சமாதியோ - தாழ்ந்து தரைமட்டமாகக் காட்சியளிக்கின்றது.

உயர்வு தாழ்வு கற்பிக்கும் உன்மத்தர்களே! உங்களது வெறி வீழ் த்தப்படத்தான்போகிறது.

இந்தச்சமுதாயம் திருந்தும்வரை-திருத்தப்படும்வரை ஆயிரக் கணக் கான “சரோஜாக்களின் கோடிக்கணக்கான ராஜாமணிகளின் கல்லறை கள் காட்சியளித்தேதீரும்;

”அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்!
புன் கண்ணீர் பூசல்தரும்”என்றதமிழ்வேதம் அதோ ஒலிக்கிறதே!

புயல்வீசியது—

பேரிடி விழுந்தது;
பேய்மழை பொழிந்தது;
எங்கே அமைதி? எங்கே?

—

## மாணவர்மன்ற அங்கத்தவர்கள்

கவனிக்க:- இதழ் 8-இல் இல 82. செல்வி நேசம்மா நாகலிங்கம் மகாஜனக்கல்லூரி–தெல்லிப்பளை என்பவரின்பெயர் தவறுதலாக விடப்பட்டுவிட்டது.

பி. தங்கவேல் அங்கத்தவர் இல. 50 இவரின் தற்போதைய விலாசம்:–
பி, தங்கவேல் 29/1, அங்கில் ரோட், மட்டக்களப்பு,

## புதிய அங்கத்தவர்கள்

91. க முருகேசன் தேவாங்கர் உ. பள்ளி சின்னாளப்பட்டி S. இந்தியா
92. எஸ். சாமியப்பன் „ „ „
93. ஸி–வி–வெங்கட்ராமன் „ „ „
94. மூ, பழனிச்சாமி „ „ „
95. டி. யோசேப் „ „ „
96. நா. கனகசுந்தரம் „ „ „
97. எஸ். உத்தரபாண்டியன் „ „ „
98. ரி. பெருமாள் „
99. எம், ஏச், எம். தவ்வீக் திஹரியா ஆ.க, பாடசாலை, கலகெடிகேன
100. ஏ-எம் அப்துல்லா, அ–த பாடசாலை, மருதமுனை; கல்முனை
101. க-பாலசுப்பிரமணியம். சென்ற் பீட்ஸ்கல்லூரி. பதுளை
102. லோ–சச்சிதாநந்தம்–மத்தியக்கல்லூரி, மட்டக்களப்பு
103. சீ. பத்மநாதன்– சென்ற் யோசேப் கல்லூரி, கம்பளை
104. செல்வி. சின்னம்மா-தம்பையா அ-த பாடசாலை; பலாங்கொடை
105 செல்வி. பரமேஸ்வரி–குமாரசாமி. அ–மி பாடசாலை, கந்தரோடை,

## பேனு நண்பர்கள்

106. ஏ. அலித்தம்பி. மெயின்வீதி, ஓட்டமாவடி வாழைச்சேனை
107. ஏ, இரத்தினம், கிறீஸ்தவ ஆலயக்கல்லூரி, குருநாக்கல்
108. யே. எம். அரியரத்தினம் அரசினர் கனிஷ்டபாடசாலை. மன்னார்
109. செல்வி திரேசம்மா, 45-சேச்வீதி; கொழும்பு.
110. ஆர், வி. பத்மநாதன் சஹிராக்கல்லூரி, புத்தளம்.
141. அ, சிவதாசன் குரும்பசிட்டி தெல்லிப்பழை
142. லோ. சச்சிதாநந்தன்– மத்தியக்கல்லூரி மட்டக்களப்பு
143, ஆர். வி. ஜெயசீலன்– சஹிராக்கல்லூரி: புத்தளம்
144, ஆர். வி. பத்மநாதன் „ „

# மலைக்காட்சி

## (புஷ்பவல்லி துரைராஜா-பலாங்கொடை)

—❧—

அழகிய மாங்கனி வடிவம் என பல தேயத்தார்கள் இலங்கையின் அமைப்பைப் புகழ்ந்துள்ளார்கள். இத்தகைய இலங்கை வெளியமைப்பில் அழகாயிருப்பது மட்டுமின்றி உள்ளேயும் அழகான மலைநாடுகளைக் கொண்டுள்ளது. இம்மலைநாடுகள் இலங்கையின் மத்தியிலமைந்துள்ளன. கொழும்பு. மட்டக்களப்பு. யாழ்ப்பாணம் முதலிய கரைப்பிரதேசங்களில் உள்ளோர் விடுதலைநாட்களில் மலையன்னையினருளைப் பெறுவதற்காக மலைநாடுகளுக்குக் குடும்பத்தோடு விஜயஞ்செய்வார்கள்.

மலைநாடுகளில் இயற்கை அன்னை தனிஅரசு செலுத்துவாள். அவளுக்கு நிகர் அவளே. படர்ந்துகிடக்கும் மலைகளிடையில் முகிற் கூட்டங்கள் சூழ்ந்துகிடக்கும், எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேரென்று அழகிய பூந்தோட்டங்களும், பயிர்ச்செய்கைகளும், காண்பவர் மனதை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் வண்ணம் கண்ணுக்குப் பசுமையாகக் காணப்படும், பூத்துக்குலுங்கி மணம் வீசுமழகிய புஷ்பங்கள்! இதழ்விரித்துச் சிரித்த வண்ணம் அவ்வழியே செல்லும் மாந்தரை வா! வா! என அழைப்பன போற் காற்றுக்கு அசைந்தவண்ணமிருக்கும். மரங்களில் பழுத்துத்தொங்கும் பழங்கள் பார்ப்போரை வாயூறச்செய்யும். குயில்கள் இசைக் கச்சேரிகளை நடாத்திக்கொண்டிருக்கும். அதற்கேற்றவாறு மயில்கள் வெகு அழகாக அபிநயம்பிடித்து நாட்டியக்கச்சேரிகளை நடாத்தும் இவ்வழியே செல்லும் எவரும் இக்காட்சிகளைக்கண்டு சற்றுநின்று ரசித்துத்தான்செல்வர். மலையுச்சிகளிலிருந்து ஊற்றெடுத்துப்பாயும் சிற்றருவிகளும், நீர்வீழ்ச்சிகளும், சல சல எனவோடி கல கலவென நகைத்து இயற்கை அன்னையின் அழகிற்கு மெருகேற்றிக் கொண்டிருக்கும் வண்டுகளும், பட்சியினங்களும் இனிமையாகப்பாடி மக்கள் மனதை ஆனந்தத்திலாழ்த்தும் இத்தனைக்கும் நடுவில் கதிரவன் மலைகளுக்கிடையில், முகிற்கூட்டங்கள் சூழ எட்டிப்பார்க்கும் காட்சியைக் கண்டால் எவரும்கட்டாயம் தம்மனதைப் பறிகொடுப்பார்கள்.

———

<u>**பிழைதிருத்தம்**</u>;— பேனநண்பர்கள் என்ற பகுதியில் (பக்கம்-12) 106-110 வரையுமுள்ள பெயர்கள் புதிய அங்கத்தவர்களாகும்.

---

வெற்றிமணியில் வெளியாகும் கதைகளிலுள்ள பெயர்கள் யாவும் கற்பனைப்பெயர்களே.

பரிசு ரூபா 1000- முடிவு திகதி 26-9-56

**திட்டமான விடைகள்**

இ-வ 1 சுதந்திரன் 5 ராசி. 6 தரு 7 பாராட்டு 8 கபோதி 14 மலைப்பழம் 16 பாளி 20 உடுக்கை

மே-கீ 1 சுராபாணம் 2 தசிரா 3 திருட்டு 4 மருகன் 10 படப்பாட்டு 11 கம்பளி 12 கமம் 20 உறி

**மாற்றுவிடைகள்**

இ-வ 4 மஞ்ஞை-மயில்; மயில்-மயூரம், எமதுவிடை மஞ்ஞை.

இ-வ 10 பகவான்-கடவுள்; பகவன்-கடவுள்: எமது விடை பகவான்.

இ-வ 21 தறி-நெய்வதற்குரிய யந்திரம். பொறி-யந்திரம்
தறி என்பதற்கு நேர்க்கருத்து இருப்பதால் எமதுவிடை தறி

மே-கீ 17 உப்பு-இரவணம் அப்பு-நீர்

புதுப்பானையிற்சரி, பழம்பானையிற்சரி உப்பைவைத்தால் புறப்பானை கசியத்தான்செய்யும். அப்பு என்பது நீர். தண்ணீர் பழம்பானையில் வைத்தால் கசியமாட்டாது, புதுப்பானையில் வைத்தால் எனக்குறிப்புக் கூறுவதால் அப்பு சிறந்தவிடை.

**இணைப்புகள்**

இ-வ 12 கபாடம்: கவாடம்; மே.கீ 13 பாலை-பதினறுவயதிற்குட்பட்டபெண் வாலை- 12வயதிற் பெண்.

பூப்பெய்தும் வயது பொதுவாக 12தான் பாலை 16 வயதிற்குட்பட்ட பெண் என இருப்பதால் வாலை சிறந்தது. எமதுவிடை கவாடம் வாலை மாற்றுவிடை கபாடம்-பாலை.

இ-வ 19 கதை தரை மே-கீ 15 அழுகல்-அழிதல் அழிதல்-கெடுதல் தொலைதல்-காணுமற்போதல் கெடுதல்-பதனழிதல் குறைதல்-கெடுதல் நசிதல்—கெடுதல்

நீரில் தத்தளிப்பவன் கரையையடைந்தாலும் தரையையடைய முடியாதிருக்கலாம், எனவே தரையையடைந்தாற்றுனே சந்தோஷப்படுவான். எனவே தரை சிறந்தவிடை. இதைக்கொண்டு அழிதல், தொலைதல். கெடுதல், குறைதல் என்பனவற்றில் சிறந்தவிடையைத்தெரிவுசெய்யவேண்டியிருக்கிறது. பழங்கள் என்று கூறப்பட்டிருப்பதால் அழிதல் கெடுதல் சிறந்தவை. ரயிலிலே அனுப்பப்படும் பழங்கள்மாத்திரம் தொலைவதில்லை. எனவே எமதுவிடை தரை-கெடுதல், மாற்றுவிடைகள் கரை-அழுகல் தரை-அழிதல் தரை-குறைதல் தரை-தொலைதல், தரை-நசிதல்

இ-வ 18 படிப்பு- நடிப்பு- மே-கீ 18 பகை நகை

மந்திரிமார்களுடன் பகைப்பதென்பதில் அர்த்தமில்லை. அன்றியும் படிப்பிலேதிறமை காட்டுபவர்கள் பாராட்டப்படுகிறுர்கள் என்று கூறுவதிலும் நடிப்பில் திறமைகாட்டுகிறவர்கள் பாராட்டப்படுகிறுர்கள் என்பது சிறப்பாகும், எமதுவிடை நடிப்பு-நகை மாற்றுவிடை படிப்பு-பகை

---

குறிப்பு:. சுதந்திரன் போட்டி இல, 30, 31, ஆகிய இரு போட்டிகளின் சரியானவிடைகளையும் ஒரே தினத்தில் வெளியிடுவது நேயர்களுக்குத்திருப்தியளிக்காது

# சிறுவர் போட்டி இல 14 இன்முடிவு

சரியானவிடை:- 1. பூவை. 2. ஆனி 3 புழு 4. நாபி. 5. அவி. 6. கம்
முதற்பரிசு ரூபா 200.

மற்றிலும் சரியானவிடை யனுப்பிய கீழ்க்காணும் 6. பேரும் தலைக்கு ரூபா 33–சதம்34 பெறுகின்றனர்.

1. கே. இரங்கநாதன். அ த. பாடசாலை உக்குவளை.
2 ஏ வேலுப்பிள்ளை மாவிட்டபுரம் தெல்லிப்பழை
3. எஸ் வேலாயுதம். டி 27 பெரியகடை. யாழ்ப்பாணம்
4. வே வன்னியசிங்கம் மயிலிட்டிதெற்கு தெல்லிப்பழை
5. பி இராமலிங்கம் பரிஅந்திரேயாக்கல்லூரி நாவலப்பிட்டி
6. ஏ. மார்க்கண்டு ,, ,, நாவலப்பிட்டி

இரண்டாவது பரிசு ரூபா–100

ஒருபிழையுடன் விடையனுப்பிய கீழ்க்காணும் 20-பேரும் தலைக்கு ரூபா 5. பெறுகின்றனர்.

1. கே. பி. கனகராஜ் கொட்டக்கலை, 2. திருமதி அடைக்கலம் யோசெப்பு நாருட்டான் 3. க. சுப்பிரமணியம் யாழ்ப்பாணம் 4· பொ. இராச–கோபாலு நாவலப்பிட்டி 5. எம். வருதராஜ் அக்கரப்பத்தனை 6. யே.–என். தம்பிப்பிள்ளை கிலாவெளி. 7. கே. ஏ. கோவிந்தன் நாரங்கலை, 8. பி. சுப்பிரமணியம் மஸ்கெலியா 9. எம், கே. முகமது யாழ்ப்பாணம் 10. எஸ். கே. இராசையா சங்கத்தானை சாவகச்சேரி 11. க. அன்னலிங்–கம் யாழ்ப்பாணம் 12. பா. குருசாமி பம்பலப்பிட்டி 13. பாலதிங்கள்ஜெ ஜோஸ் நாவலப்பிட்டி 14. என். இராசரத்தினம் மண்டூர் 15. ஏ. இரா–சரத்தினம் நாவலப்பிட்டி 16. எஸ். வேலாயுதம் யாழ்ப்பாணம் 17. ஏ. வேலுப்பிள்ளை மாவிட்டபுரம் 18. ஏ. மார்க்கண்டு நாவலப்பிட்டி. 19.கே.இரங்கநாதன் உக்குவளை 20, வே, வன்னியசிங்கம் தெல்லிப்பழை

விசேஷபரிசு:–முதலாவது 35 ரூபா 28 ரூபாவுக்குக் கூப்பன்கள் அனுப்பிய கே. ஏ. கோவிந்தன், ஏ வேலுப்பிள்ளை ஆகிய இருவரும் தலைக்கு ரூபா 17 சதம் 50 விசேஷ பரிசு பெறுகின்றனர்.

13 ரூபாவுக்கு அனுப்பிய ஏ. இராசரத்தினம் இரண்டாவது விசேஷபரிசு ரூபா 15 பெறுகின்றார்.

பரிசுபெற உரிமையுடையவர்கள் தங்கள் கோரிக்கைகளை 5–9–56க்கு முன்எழுத்துமூலம் தெரிவிக்கவேண்டும். பரிசுத்தொகைகள் 20–9–56-க்குமுன் அனுப்பப்படும். பரிசுபெற்ற நேயர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.


## வெற்றிமணி!

சிறந்தமாதப் பத்திரிகை;– இலங்கையில் நடைபெறும் போட்டிகளின் சிறந்தவிடை விமர்சனி வெற்றிமணி ஒன்றே!.

மாணவர்மன்றமும், பேனநண்பர் விலாசங்களும், கதைகளும், கட்டுரைகளும், கவிதைகளும் அடங்கியது.

வருடசந்தா ரூபா 3–00 தனிப்பிரதி–சதம் 25

மாணவர்மன்ற அங்கத்தவர்களுக்கு வருடசந்தா ரூபா 2–50

உங்கள்தேவைகளை விளம்பரஞ்செய்துவிட்டீர்களா?

# 'வெற்றிமணியில்'

வீளம்பரஞ்செய்க.

குறைந்த செலவு நிறைந்த பலன் கிடைக்கும்

விபரங்களுக்கு எழுதுக

## இன்றே எழுதுக

உங்கள் பெயருக்கு ரப்பர் ஸ்டாம்பு [சீல்] செய்துகொண்டீர்களா? இல்லையானல் இன்றே எழுதுக. உங்கள் பெயருடன் விலாசமும் அமைத்து ரப்பர்ஸ்டாம்பு செய்ய 3-ரூபாதான் 75சதமுத்திரை அல்லது போஸ்ரல் ஆடர் முற்பணமாக அனுப்புக- விலாசத்தைத் தெளிவாக எழுதுக ஏஜண்டுகளாகச் சேர விரும்புவோர் விபரங்களுக்கு எழுதுக. நல்ல கமிஷன் கொடுக்கப்படும்

சிறுவர்போட்டிக் கூப்பன்களும் எம்மிடம் கிடைக்கும்

கே. ஏ. கோவிந்தன்

2-ம் டிவிஷன் நாரங்கலை பதுளை

# ஜாலத்தீவு

எங்கே! எங்கே?

ஆம்! அடுத்த இதழில் உங்கள் அபிமானம்பெற்ற "தமிழ்த்தம்பி" எழுதுகின்ருர், இது ஓர் அற்புதமான மர்மத் தொடர் நாவலாகும். நேயர்கள் படிக்கத் தவறவேண்டாம். 1-10-56இல் வெளிவரும் வெற்றிமணியில் ஆரம்பமாகின்றது. இன்றே சந்தாப்பணத்தை அனுப்பிப் பிரதிகளைப் பெற்றுக்கொள்க.

ஆசிரியர்.

## சிறுவர் போட்டி இல: 15

**வரக்கூடிய விடைகள்:-**

1. சுரை, கீரை, காரை, பீரை.
2. ஆய், தாய், ஞாய்,
3. மோர், நீர், வேர்
4. ஈதை, வாதை. வேதை, பாதை
5. கூனி, கைனி, சனி, ஞானி
6. தேன், ஊன், மீன்

சரியான விடை இவற்றுள்தான் தெரிவு செய்யப்படும். விடைகளின் பொருள்களை ஆராய்ந்து ஏற்றவிடைகளைத்தெரிவு செய்க.

ஆசிரியர் ஏ.கே. சாமி மிட்லண்ட் பிரின்டர்ஸ்-நாவலப்பிட்டி